# || ஸ்ரீமத் பகவத்கீதை தூய உச்சரிப்பு வழிகாட்டி - நிலை 2 ||

## எழுத்துக்களின் உச்சரிப்பிற்கான இடம் மற்றும் உச்சரிப்பு விதிகள்

- சமஸ்கிருத மொழியில் எழுத்துக்களை உச்சரிக்கும் இடம் மற்றும் அதன் விதிகள் மிகவும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளன. எந்த ஒரு எழுத்தும் வாயின் குறிப்பிட்ட இடத்திலிருந்து கவனமாக உச்சரிக்கப்படுகிறது. உதாரணமாக கழுத்து (தொண்டை), அண்ணம்(மேல் பற்களுக்கு மேல்), மேல் அண்ணம், மேல் பற்கள் மற்றும் உதடுகள் மூலம் படிக்கபடுகிறது. அவை முறையே (கண்ட்ய, தாலவ்ய, மூர்தண்ய, தந்த்ய, ஓஷ்ட்ய) என்று அந்தந்த இடங்களின் மூலம் எழுத்துகளின் பெயர்களும் அறியப்படுகின்றன. உதாரணமாக 'க' வர்க எழுத்துக்கள் தொண்டையில் இருந்து உச்சரிக்கப்படுவதால் "கண்ட்ய" என அழைக்கபடுகிறது. இந்த எழுத்துக்கள் உச்சரிக்கப்படும் இடம் கீழே தரப்பட்டுள்ள படத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது.
- ஸ(स), ஶ(श), ஷ (ष) ஆகிய எழுத்துகள் முறையே தந்த்ய, தாலவ்ய, மூர்தண்ய என்று அழைக்கப்படுகின்றன. எனவே இவ்வெழுத்துக்களை உச்சரிக்கும் போது அவற்றிற்கு இணையான எழுத்துக்கள் எவ்வாறு உச்சரிக்கப்படுகிறதோ, அவ்வாறே உச்சரிக்கவும்

**#வாயின் குறிப்பிட்ட இடத்திலிருந்து உச்சரிக்கும்போது தான் சமஸ்கிருதத்தின் உச்சரிப்பு மிகச் சரியானதாக அமைகிறது என்பதை மிகவும் கவனத்தில் கொள்ள வேண்டும்.**

- **அகுஹவிஸர்ஜநீயானாம் கண்ட2:**
  **கண்ட2** – அ, ஆ, க் வர்கம், ஹ், விஸர்க3 (:)
- **இசுயஶானாம் தாலு**
  **தாலு** – இ, ஈ, ச், வர்கம், ய், ஶ்
- **த்ரடுரஷாணாம் மூர்த்தா4**
  **மூர்த்தா4** – த்ர, த்ரு, ட், வர்கம், ர், ஷ்
- **ல்ருதுலஸானாம் த3ந்தா:**
  **த3ந்த** – ல்ரு, த், வர்கம், ல், ஸ்
- **உபூபத்4மாநீயாநாமோஷ்டௌ2**
  **ஓஷ்ட2** – உ, ஊ, ப் வர்கம், உபத்மாநீய ப*, ப2*
- **ஏதை3தோ:கண்டதாலு**
  **கண்ட-தாலு** – எ, ஏ
- **ஓதௌ3தோ: கண்டோ2ஷ்ட2ம்**
  **கண்ட2-ஓஷ்ட2** – ஒ, ஔ
- **ஞமங்ணநாநாம் நாஸிகா ச**
  **முக-நாஸிகா** – ங், ஞ், ண், ன், ம்
- **வகாரஸ்ய த3ந்தோஷ்ட2ம்**
  **த3ந்த-ஓஷ்ட2** – வ்
- **ஜிஹ்வாமூலீயஸ்ய ஜிஹ்வாமூலம்**
  **ஜிஹ்வாமூல** – ஜிஹ்வாமூலீய க*, க2*
- **நாஸிகாऽநுஸ்வாரஸ்ய**
  **நாஸிகா** – அநுஸ்வார் (ं)






கீதா பரிவாரின் ஆவணங்களை வேறு எந்த இடத்திலும் பயன்படுத்த முன் அனுமதி அவசியம். அனுமதி பெற விரும்புவோர் தங்கள் நோக்கத்தை எங்களுடன் இந்த இணைப்பில் consent@learngeeta.com தொடர்பு கொண்டு எழுதவும்.

## அவக்ரஹ-

- அவக்ரஹ என்பது **'S'** வடிவ ஒரு சின்னம். இது சந்தியின் காரணமாக அ - விடுபட்டதை குறிக்கிறது. அதற்கு சுயமான எந்த உச்சரிப்பும் கிடையாது. எப்பொழுதும் அவக்ரஹ ஆ, ஓ, ஏ போன்ற நெடில் எழுத்துக்களுக்கு பிறகு வருகிறது.

## ஸ்ரீமத் பகவத் கீதையில் பயன்படுத்தும் சந்தம்

- சமஸ்கிருத மொழியில் அநேக விதமான சந்தங்கள் உள்ளன. முழு பகவத் கீதையில் 1}அனுஷ்டுப் சந்தம் 2)த்ரிஷ்டுப் சந்தம் என்ற இரண்டு சந்தங்கள் மட்டுமே உபயோகப்படுத்தப் பட்டுள்ளன. அனுஷ்டுப் சந்தம் மொத்தம் "32" எழுத்துக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு சரணத்திலும் "8" எழுத்துகள் வீதம் வரும். த்ரிஷ்ட்டுப் சந்தம் மொத்தம் "44" எழுத்துக்களைக் கொண்டது. ஒவ்வொரு சரணத்திலும் "11" எழுத்துகள் வீதம் வரும். ஒவ்வொரு சரணமாக நிறுத்திப் படிப்பதையே சந்த சாஸ்திரத்தில் '**யதி**' என்று அழைக்கப்படுகிறது.
  **# நினைவில் கொள்ள வேண்டிய சிறப்பு விதி என்னவென்றால் பகவத் கீதையில் (11/1, 2/6 , 2/29, 8/10, 15/3) ஆகிய ஸ்லோகங்களில் சில சரணங்களில் குறிப்பிட்ட எழுத்துகளை விட குறைவாகவோ அல்லது அதிகமாகவோ காணப்படுகின்றன.**

## 'ஸ்' மெய்யெழுத்தில்(स्) ஆரம்பமாகும் வார்த்தை உச்சரிப்பு முறை:

- ஒரு வார்த்தை 'ஸ்' என்ற மெய்யெழுத்தில் தொடங்கினால் அதற்கு முன் நாமாக எந்த உயிர் எழுத்தையும் இணைத்து உச்சரிக்கக்கூடாது. எ.கா**. "ஸ்தான்"** என்ற வார்த்தையை பல சமயங்களிலும் **"இஸ்தான்"** என்று தவறாக உச்சரிக்கும் வழக்கம் உள்ளது. அது சரியான உச்சரிப்பல்ல.

## ஆகாத் விதிகள் பற்றிய விளக்கம்:

- த்3(द्) மற்றும் ய(य) எழுத்துகளின் சேர்க்கையால் த்3ய(द्य) என்ற கூட்டெழுத்து உருவாகிறது. அதே போல் த்3(द्), த்4(ध्) மற்றும் य ய ஆகிய மூன்று எழுத்துகளும் சேர்ந்து த்3த்4ய (द्ध्य) என்ற கூட்டெழுத்து உருவாகிறது. முதல் வகை கூட்டெழுத்தில் இரண்டு எழுத்துகளும், இரண்டாவது வகையில் மூன்று எழுத்துகளும் உள்ளன. மேற்கூறிய இவ்விரண்டுமே கூட்டெழுத்துக்கள் (ஸய்யுக்த) என்றே அழைக்கப்படுகின்றன.
- ஆகாத்தின் விதிப்படி கூட்டெழுத்துகளில் முதல் எழுத்தை இரட்டிப்பு செய்து படிக்க வேண்டும். இங்கனம் இரட்டிப்பு செய்யப்படும் எழுத்து அந்த வர்கத்தின் இரண்டாவது எழுத்தாக இருப்பின் அதே வர்கத்தின் முதல் எழுத்தையும், மற்றும் இரட்டிக்கப்படும் எழுத்து அந்த வர்கத்தின் நான்காவது எழுத்தாக இருப்பின் அதே வர்கத்தின் மூன்றாவது எழுத்தையும் உபயோகிக்க வேண்டும். ஆகாத் விதியில் இரட்டிக்கப்படும் எழுத்து வர்கத்தின் முதலாவது மற்றும் மூன்றாவது எழுத்தாக இருப்பின் அதே எழுத்துகள் இரட்டிப்பு செய்யப்படும். உதாரணமாக-

- அக்ஷர = அ க்1 ஷர > அ க்1 க்1 ஷர = அக்ஷர
- வ்யாக்2யா = வ்யா க்2 யா > வ்யா க்2 க்2 யா > வ்யா க்1 க்2 யா = வ்யாக்1க்2யா
- வித்3தி4 = வி த்3 தி4 > வி த்3 த்3 தி4 = வித்3 த்3தி4
- யுத்4யதி = யு த்4 யதி > யு த்4 த்4 யதி > யு த்3 த்4 யதி = யுத்4யதி

- சில இடங்களில், உயிரெழுத்துக்களுடன் கூட்டெழுத்துக்கள் இணைத்த பிறகும் விதிவிலக்கின் காரணமாக ஆகாத் கொடுக்கப்படவில்லை. அதேபோல ஒரே எழுத்து இரண்டு முறை வருவது, மூன்று மெய்யெழுத்துக்கள், கூட்டெழுத்துக்களாக இணைந்து வருவது, ரஃபார் (மேலே ர்) அல்லது ஹ என்ற எழுத்து வருவது போன்றவை விதி விலக்குகள். ஆகாத் சின்னம் இல்லாத இடங்களில், ஆகாத் இல்லாமலேயே பயிற்சி செய்யுங்கள்.

**#நான்கு வர்க்கங்களின் முதல் எழுத்து கூட்டெழுத்தின் முதல் எழுத்தாக வரும் பட்சத்தில் அந்த வர்கத்தைச் சேர்ந்த முதல் எழுத்தே ஆகாத் விதிப்படி இரட்டிப்பு செய்யப்படும்.**


கீதா பரிவாரின் ஆவணங்களை வேறு எந்த இடத்திலும் பயன்படுத்த முன் அனுமதி அவசியம். அனுமதி பெற விரும்புவோர் தங்கள் நோக்கத்தை எங்களுடன் இந்த இணைப்பில் consent@learneeta.com தொடர்பு கொண்டு எழுதவும்.

# சந்தி விதிகள்

சமஸ்கிருத்தில் இரண்டு எழுத்துகள் ஒன்று சேரும்போது ஏற்படும் மாற்றமே சந்தி எனப்படுகிறது. ஒன்றாக வரும் எழுத்துக்கள் உயிரெழுத்துக்களாக இருந்தால் , அந்த சந்தி "ஸ்வர் சந்தி "என்றும், ஏதேனும் ஒரு மெய்யெழுத்து இருந்தால், அது "வ்யஞ்சன் சந்தி" என்றும், அனுஸ்வாரத்திலோ, விஸர்கத்திலோ உண்டாகும் மாற்றத்தை "அனுஸ்வார் சந்தி", என்றும் "விஸர்க சந்தி" என்றும் அழைக்கப் படுகிறது .சந்திக்குப் பிறகு ஒரு எழுத்தோ பல சமயங்களில் அதற்கு மேற்பட்ட இரண்டு எழுத்துக்களோ மாறுகின்றன. அந்த மாற்றம் என்ன, அது எப்படி நடக்கிறது என்பதை இந்த விதிகளில் தெரிந்துகொள்வோம்.

## விஸர்க சந்தி:

விஸர்கத்துக்கு முன்னும் பின்னும் உள்ள எழுத்துக்களின் அடிப்படையில் 'விஸர்க சந்தி' நிகழ்கிறது. எனவே விஸர்கத்தில் நிகழும் அனைத்து மாற்றங்களிலும் அதற்கு முந்தைய மற்றும் பிந்தைய எழுத்துகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

1. விஸர்கத்தின் முந்தைய எழுத்து **'அ '** மற்றும் பிந்தைய எழுத்தும் **'அ'** அல்லது ஏதேனும் **மென்மையான எழுத்துகளாக** (க3, க4, ஜ, ச4, ட3, ட4, த3, த4, ப3, ப4, ய, ர, ல, வ, ஹ) மற்றும் அனுநாசிக் (ங,ஞ,ண,ந,ம,ன) இருக்கும் பட்சத்தில் விஸர்கத்தின் முன்னால் உள்ள எழுத்து சந்தி காரணமாக **'ஓ'** ஆக மாறுகிறது.

   **# கவனிக்கவும் விஸர்கத்தின் பிந்தைய எழுத்து 'அ' எனில் , விஸர்கம் மற்றும் அதன் முந்தைய எழுத்து" ஓ "ஆக மாறிய பிறகு, அந்த பிந்தைய அ-காரம் 'அவகிரஹ'' (S) ஆக மாற்றப்படுகிறது. அதாவது "அ" மறைந்து அதன் இடத்தில் அவக்ரஹ சின்னம் வருகிறது.**

| விஸர்கத்தின் முன்பு | விஸர்க | விஸர்கத்தின் பின்பு | விஸர்கத்தின் மாறிய வடிவம் | உதாரணம் |
|---|---|---|---|---|
| அ | : | அ/மென்மையான எழுத்துகள் | ஓ / ஓ S | **த3ர்ப : + அபி4மானஶ்ச = த3ர்போSபி4மானஶ்ச** (16/4) **சேத்ஸூது3ராசார : + ப4ஜதே = சேத்ஸூது3ராசாரோ ப4ஜதே** (9/30) |

2. விஸர்கத்திற்கு முன் "அ" -உயிரெழுத்து இருந்து விஸர்கத்துக்குப் பின் "அ" தவிர மற்ற **உயிர் எழுத்துகள் இருந்தால், அந்த** 'விஸர்கம்' **தவிர்க்கப்படும்**. அதாவது விஸர்கத்தின் மறைவு (லோப்) ஏற்படும்.

   **# இந்த விதி அவ்யய (indeclinable) வார்த்தைகளுக்குப் பொருந்தாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இதற்கு 5வது விதியைப் பார்க்கவும்.**

| விஸர்கத்தின் முன்பு | விஸர்க | விஸர்கத்தின் பின்பு | விஸர்கத்தின் மாறிய வடிவம் | உதாரணம் |
|---|---|---|---|---|
| அ | : | அ - தவிர உள்ள மற்ற உயிரெழுத்து | லோப் : மறைந்து விடும் | மன: + ஆத4த்ஸ்வ =மன ஆத4த்ஸ்வ. (12/8) |

3. விஸர்கத்தின் முன்பு **'ஆ'**- உயிரெழுத்து இருந்து, விஸர்கத்திற்கு பிறகு **எந்த ஒரு உயிரெழுத்தோ** அல்லது **மென்மையான எழுத்துகளோ** வருமாயின் விஸர்க (லோப்) மறைந்துவிடும். விஸர்கத்தின் உச்சரிப்பு தவிர்க்கப்படும்.

| விஸர்கத்தின் முன்பு | விஸர்க | விஸர்கத்தின் பின்பு | விஸர்கத்தின் மாறிய வடிவம் | உதாரணம் |
|---|---|---|---|---|
| ஆ | : | உயிரெழுத்து/மென்மையான எழுத்து | (: )லோப் மறைவு | மாயயாபஹ்ருதஞா னா : + ஆஸூரம் = மாயயாபஹ்ருத |



கீதா பரிவாரின் ஆவணங்களை வேறு எந்த இடத்திலும் பயன்படுத்த முன் அனுமதி அவசியம். அனுமதி பெற விரும்புவோர் தங்கள் நோக்கத்தை எங்களுடன் இந்த இணைப்பில் consent@learngeeta.com தொடர்பு கொண்டு எழுதவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ஞானா ஆஸூரம் (7/15) |

4. விஸர்கத்தின் முன்பு **'அ' மற்றும் 'ஆ' வை தவிர மற்ற** உயிரெழுத்துகளும் விஸர்கத்தை அடுத்து **எந்த ஒரு உயிரெழுத்தோ** மற்றும் மென்மையான எழுத்துகளோ வரும் பட்சத்தில் விஸர்கம் ர்- ஆக மாறிவிடுகிறது. இவ்வாறு மாறும் விஸர்கம் உயிரெழுத்துடன் சேர்ந்து விடுகிறது. உயிர்மெய்யெழுத்து வருமாயின் விஸர்க அதன் மேல் சென்று ரஃபார் (மேலே ர்) ஆக மாறிவிடுகிறது.

| விஸர்கத்தின் முன்பு | விஸர்க | விஸர்கத்தின் பின்பு | விஸர்கத்தின் மாறிய வடிவம் | உதாரணம் |
|---|---|---|---|---|
| அ/ ஆ தவிரவுள்ள உயிரெழுத்து | : | உயிரெழுத்து/மென்மையான எழுத்து | ர் | து3: + நிரீக்ஷயம் = து3ர்நிரீக்ஷயம் (11/17) |

5. **அவ்யயத்தில்** (indeclinable) நிலைத்திருக்கும் விஸர்கமானது அதன் முன்புள்ள எழுத்து **ஏதாவது உயிரெழுத்தோ** அல்லது ர-தவிர உள்ள பிற **மென்மையான எழுத்துகள்** வருமாயின் விஸர்கம் **"ர்"** - ஆக மாறிவிடுகிறது.

| விஸர்கத்தின் முன்பு | விஸர்க | விஸர்கத்தின் பின்பு | விஸர்கத்தின் மாறிய வடிவம் | உதாரணம் |
|---|---|---|---|---|
| ஏதோ ஒரு உயிரெழுத்து | : | உயிரெழுத்து/மென்மையான எழுத்து | ர் | புன : + ஜன்ம = புனர்ஜன்ம (8/16) |

6. விஸர்கத்தின் முன்பு **எந்த ஒரு உயிரெழுத்தோ** மற்றும் விஸர்கத்தையடுத்து **'ச1' அல்லது 'ச2'** வருமாயின் விஸர்கம் **ரு** ஆக மாறிவிடுகிறது. அதேபோல் **'ட1' அல்லது 'ட2'** வரும் பட்சத்தில் **'ஷ'** வாகவும் **'த1' அல்லது 'த2'** வரும் போது விஸர்கம் **'ஸ'** ஆகவும் மாறிவிடுகிறது.

| விஸர்கத்தின் முன்பு | விஸர்க | விஸர்கத்தின் பின்பு | விஸர்கத்தின் மாறிய வடிவம் | உதாரணம் |
|---|---|---|---|---|
| எந்த ஒரு உயிரெழுத்து | : | ச1/ச2 | ரு | **யோகின : + சைனம் = யோகின ரு்சைனம்** ( 15/11) |
| | | ட1/ட2 | ஷ | **தனு : + ட1ங்கார் =தனுஷ்டங்கார்** |
| | | த1/த2 | ஸ | **ஹன்யு : + த1ன்மே ஹன்யுஸ்தன்மே** ( 1/46 ) |

7. விஸர்கத்திற்குப் பிறகு க1 (क) அல்லது க2( ख) வருமாயின் விஸர்கத்தின் உச்சரிப்பு க்2(ख) ஆக உச்சரிக்கப்படுகிறது.
**# கவனத்தில் கொள்ளவும் 'க்2' போல உச்சரிக்க வேண்டும்**

| விஸர்கத்தின் முன்பு | விஸர்க | விஸர்கத்தின் பின்பு | விஸர்கத்தின் மாறிய வடிவம் | உதாரணம் |
|---|---|---|---|---|
| ஏதாவது உயிரெழுத்து | : | க1/க2 | க்2 | மைத்ர: +க1ருண = மைத்ரக்2கருண(12/13) |

8. விஸர்கத்திற்கு பிறகு **ப1** (प) அல்லது **ப2**(फ) வரும் பட்சத்தில் அதன் உச்சரிப்பு **ப்2**(f) போல உச்சரிக்கப்படுகிறது.
**# கவனத்தில் கொள்ளவும் 'ஃப்' (f) போல உச்சரிக்க வேண்டும்**


கீதா பரிவாரின் ஆவணங்களை வேறு எந்த இடத்திலும் பயன்படுத்த முன் அனுமதி அவசியம். அனுமதி பெற விரும்புவோர் தங்கள் நோக்கத்தை எங்களுடன் இந்த இணைப்பில் consent@learngeeta.com தொடர்பு கொண்டு எழுதவும்.

| **விஸர்கத்தின் முன்பு** | **விஸர்க** | **விஸர்கத்தின் பின்பு** | **விஸர்கத்தின் மாறிய வடிவம்** | **உதாரணம்** |
|---|---|---|---|---|
| ஏதாவது உயிரெழுத்து | : | ப1/ப2 | ப்(f) | தத : + பத3ம்<br>ததப்2பத3ம் (15/14) |

|| இதி ||


கீதா பரிவாரின் ஆவணங்களை வேறு எந்த இடத்திலும் பயன்படுத்த முன் அனுமதி அவசியம். அனுமதி பெற விரும்புவோர் தங்கள் நோக்கத்தை எங்களுடன் இந்த இணைப்பில் consent@learneeta.com தொடர்பு கொண்டு எழுதவும்.